# பத்திரிக்கைச் செய்தி

## வாரிசு சான்றிதழ் வழங்க ரூ.2,000/- லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் கைது

புகார்தாரர் திரு.கோபிநாகராஜன், அடியனூத்து கிராமம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் தன்னுடைய பாட்டி பெயரில் வாரிசு சான்றிதழ் வாங்குவதற்காக அடியனூத்து கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து வாரிசு சான்றிதழ் வழங்குவதற்காக திரு.முருகானந்தம், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் திரு.செந்தில், கிராம உதவியாளர், அடியனூத்து கிராமம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் தங்களுக்கு லஞ்சமாக ரூ.2,000/- கொடுக்க வேண்டும் என புகார்தாரரிடம் கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திண்டுக்கல் பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 30.08.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.முருகானந்தம், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் திரு.செந்தில், கிராம உதவியாளர் ஆகியோர் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.2,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.